05.06.2023

கூடுதல் அமர்வு நீதிமன்றம்(விரைவு நீதிமன்றம்) விழுப்புரம்.

அமர்வு வழக்கு எண்.257/2014

அ.சா.5

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ஆறுமுகம் | சாதி | |
| த/பெ | சதாசிவம்முதலியார் | மதம் | |
| கிராமம் | டி.ஆண்டிப்பாளையம் | தொழில் | |
| தாலுக்கா | விக்கிரவாண்டி | வயது | 60/2023 |
| மாவட்டம் | விழுப்புரம் | தேதி | |

இன்று உதவியாளர் அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

முதல் விசாரணை

நான் டி.ஆண்டிப்பாளையத்தில் வசித்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். இந்த வழக்கில் இறந்துபோன பாலையா எனது ஊர்காரர் ஆவார். அ.சா.1 யுவராஜ் மற்றும் அ.சா.2 வசந்தகுமாரி ஆகியோர்களை எனக்கு தெரியும். அவர்கள் பாலையாவின் மகள், மனைவி ஆவார்கள். ஆஜர் எதிரிகள் மற்றும் அறிவழகன், மகேந்திரன், ஆகிய எதிரிகளை எனக்கு தெரியாது. பாலையா என்பவர் இறந்துவிட்டார். அவர் சுமார் 10 வருடங்களுக்கு இறந்துவிட்டார். 10 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் இரவு சுமார் 10மணியளவில் நான் வீட்டிலிருந்து வெளியே வந்தபோது ஊரில் இருந்து பொதுமக்கள் அனைவரும் வீட்டிலிருந்து வெளியே திபுதிபு என்று ஓடினார்கள். என்ன விபரம் என்று நான் கேட்டேன். பாலையா சோரப்பட்டுக்கும் ஆண்டிப்பாளையத்திற்கும் இடையே ஒரு இடத்தில் கொலை செய்யப்பட்டு கிடப்பதாக நான் கேள்விப்பட்டேன். நான் அங்கு செல்லும் போது நிறையப்பேர் இருந்தார்கள். நான் சென்று பார்த்தபோது பிரேதம் அங்கு தான் இருந்தது. அவருக்கு உடம்பில் ரத்தக்காயங்கள் இருந்தது. குறிப்பிட்டு அதை நான் பார்க்கவில்லை. அப்போது என்னுடன் பாலையாவின் மனைவி அ.சா.2 வசந்தகுமாரி உடனிருந்தார். காவல்துறையினர் அங்கு வந்திருந்தார்கள். காவல்துறையினர் இது குறித்து என்னை

எதுவும் விசாரிக்கவில்லை.

(சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுகு விசாரணை செய்ய அரசு தரப்பில் அனுமதிகோரி அனுமதி வழங்கப்பட்டது.)

**<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை</u>**

கடந்த 09.9.2009 தேதி இரவு நானும் என்னுடைய நண்பர் ராஜா என்பவரும் என்னுடைய மோட்டார் சைக்கிளில் அவரை பின்னால் அமர வைத்துக்கொண்டு கண்டமங்கலம் வந்து ஊருக்கு திரும்ப போகும் போது இரவு சுமார் 10மணியளவில் சோரப்பட்டு-ஆண்டிப்பாளையம் ரோட்டில் பூரணச்சந்திரன் கரும்புக்கொல்லைக்கு எதிரில் மெயின்ரோட்டில் எங்கள் ஊரை சேர்ந்த பாலையா என்பவரை வழி மறித்து கீழே தள்ளி எதிரி 2 சாந்தராஜ் என்பவர் தான் வைத்திருந்த நீண்ட வெட்டுக்கத்தியால் பாலையாவின் இடது பக்க தாவாக்கட்டையிலும், கழுத்திலும், இடது பக்க காதிலும் மாறிமாறி வெட்டினார் என்றும், 1வது எதிரி தமிழ் என்ற தமிழ்வாணன் மடக்கு வெட்டுக்கத்தியால் பாலையாவின் குரல்வளையை குத்தி அறுத்தார் என்றும், 5ம் எதிரி பாலமுருகன் தான் வைத்திருந்த நீண்ட நுனி வளைந்த வெட்டுக்கத்தியால் பாலையாவின் இடது கை முட்டியிலும் , தோள் பட்டையிலும் மாறிமாறி வெட்டினார் என்றும், 3ம் எதிரி பிரேம்குமார் இரும்பு பைப்பால் தலையில் அடித்தார் என்றும், 6ம் எதிரி மணிபாலன் தடியால் இடது உள்ளங்கை, வயிறு, வலது கை ஆகிய இடங்களில் அடித்தார் என்றும், உடனிருந்த சின்னபாபுசமுத்திரத்தை சேர்ந்த அறிவழகன் கண்டமங்கலம் காவல்நிலையத்தை சேர்ந்த அருள் ஆகியோர் மேற்படி எதிரிகளுக்கு துணையாக இருந்தார்கள் என்றும், மேற்படி சம்பவத்தை நானும், ராஜாவும் மோட்டார் சைக்கிள் வெளிச்சத்தில் பார்த்தோம் என்றும், தமிழ்வாணன் எங்களை பார்த்து அவர்வைத்திருந்த கத்தியை காட்டி இந்த கொலையை வெளியே சொன்னால் உங்களுக்கும் இந்த கதி தான் என்று மிரட்டினார் என்றும், போலீஸ் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிகளை காப்பாற்றும் நோக்கத்தோடு பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை-இல்லை</u>**